

# ஆகம மரபும்
# ஸ்ரீ முன்னேஸ்வர கர்ப்பக்கிருக
# இலிங்கமும்

பா. சி. சர்மா, B.Sc ( Cey. ),Dip.in Ed. ( Cey. )



இலிங்க நாளமும் யோனி பீடமும்



பாத சிலைகளின் ஸ்வஸ்திய அமைப்பு

# ஆகம மரபும் ஸ்ரீ முன்னேஸ்வர கர்ப்பக்கிருக இலிங்கமும்

பா. சி. சர்மா, B.Sc ( Cey. ),Dip.in Ed. ( Cey. )

இலங்கையில் ஆகம மரபுகளுக்கேற்ற முறையில் அமைந்த க்ஷேத்திரங்களுள் ஸ்ரீ முன்னேஸ்வர திருத்தலம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். காரணாகமும், காமிகாகமும் சிவனுடைய மூர்த்தி பேத வடிவமைப்புகளை விபரமாக பிரமாணங்களுடன் விளக்கிக் காட்டுகின்றன.

சிவமூர்த்தங்களுக்கெனப் பொதுவாகப் குறிப்பிடப்படும் உருவ, அருவ, அருவுருவ திருமேனிகளுள் விசேடமானதெனக் கருதப்படும், அருவுருவ நிலையைச் சித்தரிப்பது இலிங்கத் திருமேனியாகும். இலிங்கம் என்ற சொற்றொடர் ' அடையாளம்' என்ற கருத்தைச் சுட்டி நிற்கும். எனவே சிவனைக் குறிப்பிட்டுக்காட்டும் அடையாளமெனச் சிவலிங்கத்தைக் கருதலாம். கண்ணால் காண இயலாதவனை எளிதிற் கிரகிக்க முடியாதவனை, வழிபாட்டினாலும் தியானத்தினாலும் கிரகிக்க முற்படுவோருக்கு, சிவலிங்கம் பரம்பொருளை உணர்த்தும் அடையாளமாக விளங்கும;.[1] இலிங்கம் பற்றியும் ஏனைய வடிவங்கள் பற்றியும் இதிகாச புராணங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.[2]

சிவம் என்ற சொல் மங்கலம் என்ற கருத்தைத் தரும். மங்கலத்தைத் தருவது பரவெளி என விரியும். எல்லாப் பொருள்களோடு சேர்ந்தும், அப்பொருள்களிலிருந்து பிரிந்தும், அப் பொருள்களில் பற்றற்றும், இருக்கக் கூடிய பொருள் அகண்ட வெளியாக அமைவுறுமே தவிர உருவமாகவோ, அருவுருவமாகவோஇருக்க முடியாது எனலாம். ஆகாயம் போன்ற இது, நான்கு பூதங்களோடு ( மண், நீர், நெருப்பு, காற்று ) சேர்ந்தும், அதேவேளை, ஒன்றுடனும் சேராது தனித்தும் நிற்கும். எனவே பரவெளியே சிவத்தின் வடிவமாகும். ஆகாயம் என்ற பூதவெளி, அறிவில்லாத சடமாகும். சிவமானது பரவெளியாகும். அறிவுடைய சித்து. இப்பரவெளி சிதாகாயம், ஞானகாயம் என்றெல்லாம் குறிப்பிடப்படும். இதனை விளக்குவதற்கு ஞானவெளியாகிய சிவலிங்கத்தின் திருமேனி உயர்ந்தும் வட்டமாக அகன்றும் அமைந்துள்ளதை திருமந்திரம்[3] காட்டுகின்றது.

இலிங்கம் என்ற சொல் "யாவும் தோன்றி மறையும் மூலம் " என்ற கருத்தைத் தரும். லிங்- லயம், கம் - தோன்றல் என்ற கருத்தைத் தரும்.

இதனைக் சுப்பிரபேதாகமும் சுட்டிக் காட்டுகின்றது.[4] சிவலிங்கமானது ஆவுடையார் என்ற சிற்சக்தியின் மேல் நிறுவப்பட்டுள்ளது. பரசிவமாகிய பரவெளியில் எந்நேரமும் சிற்சக்தி என்ற அசைவு ஏற்பட்டவாறே இருக்கும்.

இவ்வாறான அசைவுச்சக்தி பரவெளியில் உள்ளது என்பதை பரவெளியை உணர்த்தும் சிவலிங்கத்தில் வளைந்திருக்கும் ஆவுடையார் குறிக்கின்றது. ஆவுடையார் ஒரு பக்கத்தில் கோமுகியாக நீண்டிருக்கின்றது. இது கோவாகிய பசுக்கள்

( உயிர்களை ) தன்னகத்தே ஆட்கொண்டு மலநீக்கம் செய்து சிவமாக்கும் செயலைக் குறிக்கும்.

இலிங்கம் என்ற சொல் யோனி, லிங்கம் என்ற பதங்களுடன் தொடர்புற்றுக் காணப்பட்டாலும்[5] இவை அடையாளம் அல்லது அம்சம் என்ற கருத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வாறே இலிங்கம் (ஜனன)க் குறிவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.[6] இதே கருத்தைப் பல மேல்நாட்டாய்வாளர்களும் முன் வைத்தனர். எனினும் இவ்வெண்ணக் கருத்துக்குச் சான்றாக உள்ள வாதங்களை வரிசைக் கிரமமாக மறுத்து வாதிட்டு, இலிங்கம் என்பது சிவனுடைய சாந்நித்தியம் நிறைந்த தியான வழிபாட்டுக்கென்றே தோன்றிய சின்னம் என்று தெளிவாக நிறுவப்பட்டுள்ளது.[7]

இலிங்க வழிபாட்டின் ஆரம்பம் பற்றி குறிப்பிடும் போது பிரமனும், விஷ்ணுவும் தங்களுக்குள் வல்லமை உள்ளவர் யார்? என அறிந்து கொள்ளும் பொருட்டு வாதாடி ஈற்றில் போர் தொடுத்தனர். அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன், உண்மையை விளக்கும் பொருட்டு, இருவருக்குமிடையில் ஒளிப்பிளம்பாக தோன்றி இந்த ஒளிப் பிளம்பின் " அடியையோ அல்லது முடியையோ முதலில் காண்பவரே உங்கள் இருவரிலும் வல்லமை கூடியவர் "என அசரீரி வாக்கினால் உணர்த்தினார். பிரம்மன் அன்னப்பட்சி ரூபமெடுத்து முடியையும், விஷ்ணு பன்றி வடிவமெடுத்து அடியையும் காணச்சென்று, இறுதியில் ஜோதியின் அடிமுடி காணாது தோல்வியுடன் திரும்பிவந்து சிவனருளால் தம் ஆணவத்தை உணர்ந்து வழிபட்டனர். அன்று முதல் இலிங்க வழிபாடு இடம் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.[8]

இலிங்க வழிபாட்டைப் பிரணவ கோட்பாட்டுடன் சிவபுராணத்தின் வித்யேஸ்வர சம்ஹிதையில்[9] குறிப்பிடப்படுவது நோக்கற்பாலது.

இராமபிரான், இராவணனை சம்ஹாரம் செய்த பிரம்மஹத்தி தோஷ நிவர்த்திக்காக இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பிராயச்சித்தம் செய்த விபரத்தை ஸ்கந்தபுராணம் காட்டும்.[10]

ஆகம நூல்களும் பல்வேறு சிற்ப நூல்களும், சிவன் கோவில்களில் கருவறையில் பிரதான மூர்த்தமாக அமையும் சிவலிங்கம் இருக்க வேண்டிய அளவு முறைகளை விபரமாகக் காட்டுகின்றன. இலிங்கத்தை அமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கற்கள் பற்றி லிங்கலக்ஷன விதிப்படலத்தில் பூர்வ காரணாகமமும், பூர்வகாமிகாகமும் இயம்பும்.[11]

மானசாரத்தின் லிங்கவிதானப் பகுதியிலும்[12] காசியப சில்ப சாஸ்திரத்தின்சிவலிங்கலக்ஷணப்பகுதியிலும்[13]
சில்பரத்தினத்தின் லிங்கலக்ஷணப் பகுதியிலும்[14] ஸ்ரீ ஸாரஸ்வதிய சித்திர கர்ம சாஸ்திரத்தின் லிங்கபேரமானப் பகுதியிலும்[15] சகளாதி காரத்தின் அளவைகளின் வகை என்ற பகுதியிலும;[16] இலிங்கம் பற்றிய விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

கருவறையில் நிரந்தரமாக அசையாமல் அமைந்துள்ள் தாவரலிங்க ( பரார்த்தலிங்க )மே, பூசைகளுக்காக இடத்துக்கிடம் கொண்டு செல்லப்படுகின்ற ஜங்கம லிங்கத்தை விட சிறந்ததாகும்.[17]

இலிங்கவகைகளை உருவாக்குவதற்கான கற்களைத் தேர்ந்தெடுக்கும் சிவாகிரகண முறைகளைப் பற்றி காரணாகமம்[18] விரிவாகக் குறிப்பிடுகின்றது. இவ்வாறான கற்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்களைப் பற்றிய விவரங்களை காமிகாமம்[19] காரணாகாமம;[20] காசியப சில்பசாஸ்திரம;[21] ஆகிய நூல்கள் விளக்கிக் காட்டுகின்றன.

லிங்கம் அமைப்பதற்கு, கற்களில் உண்டாகும் ஒலியைக் கொண்டு அவற்றை புருஷ சிலைக்கல், ஸ்திரி சிலைக்கல் , நபும்சக சிலை க்கல்,என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம், எனக் காரணாகமமும;[22] காசியப சில்பசாஸ்திரமும்[23] காட்டுகின்றன.

புருஷசிலைக்கல்லைத் தட்டினால் மணியோசையையொத்த நாதத்தையும் நீண்ட வடிவத்தையும் கொண்டிருக்குமெனவும்[24] ஸ்திரிசிலைக்கல்லைத் தட்டினால் பனையோலையை ஆட்டும் போது ஏற்படும் ஓசையையொத்த ஒலியையும் கொண்டிருக்குமெனவும;[25] நபும்சகசிலைக்கல்லைத் தட்டினால் கரடுமுரடான தன்மையையும் உறுதியற்ற நிலையையும் எவ்விதமான ஒலியையும் கொண்டிருப்பதில்லையெனவும;[26] கூறப்படுகின்றது. அதே வேளை கல்லின் வடிவமைப்பை ஆதாரமாகக் கொண்டு காசியப சில்பசாஸ்திரத்தில் சற்சதுரமாகவும் எண்கோண வடிவமாகவும் உள்ளவை ஸ்திரி சிலை எனவும் நீள் சதுரமாகவும் வட்டமாகவும் பத்துப் பன்னிரன்டு கோணமான வடிவமைப்பைக் கொண்டவை புருஷசிலை எனவும் வட்டமான உருவஅமைப்பைக் கொண்டவை நபும்ஸக சிலை எனவும்[27] காட்டுகின்றது.

இலிங்கத்தை புருஷசிலை வகைக் கல்லினாலும் ஆவுடையார் எனப்படும் பீடத்தை ஸ்திரி வகைக் கல்லினாலும் ஆதார அடித்தள பாதாதாரத்தை நபும்சக வகைக் கல்லாலும் வடிவமைக்க வேண்டுமென காசியபசில்ப சாஸ்திரம்[28] காரணாகமம்[29] ஆகிய நூல்கள் கூறுகின்றன.

கோயில் கர்ப்பக்கிருக அமைப்பின் அடிப்படையில் இலிங்கம் அமைய வேண்டிய ஏழு அளவு முறைகளை காமிகாமம், காரணாகமம், காசியப சில்ப சாஸ்திரத்திம், ஸ்ரீ ஸாரஸ்வதிய சித்ர கர்ம சாஸ்திரம், சில்பரத்தினம் போன்றவை கோடிட்டுக்காட்டுகின்றன.[30]

இவ்வேழு அளவு முறைகள் பின்வருமாறு

1. கோயில் கர்ப்பக்கிருக அளவின் விகிதாசாரத்தின் அடிப்படையில் அமைவது

2. கோயில் கர்ப்பக்கிருக துவார அளவின் விகிதாசார அடிப்படையில் அமைவது

3. கோயில் கர்ப்பக்கிருக ஸ்தம்பத்தின் விகிதாசார அடிப்படையில் அமைவது

4. கோயில் கர்ப்பக்கிருக பூமட்ட அளவின் விகிதாசார அடிப்படையில் அமைவது

5. ஹஸ்தமான அளவின் விகிதாசார அடிப்படையில் அமைவது

6. தாளமான அளவின் விகிதாசார அடிப்படையில் அமைவது

7. அங்குல அளவின் விகிதாசார அடிப்படையில் அமைவது

சிவாம்சம், விஷ்ணுவாம்சம், பிரம்மாம்சம் என்ற மூன்று பிரிவுகளுடன் கூடிய இலிங்கத்தை ஒரு முழ உயரத்துக்கு குறைவாகச் செய்தல் கூடாது என விதிக்கப்பட்டுள்ளது. இலிங்கத்தின் உயரத்தில் ஒன்பத்தில் நான்கு பாகத்தை பீடத்தினுள் பொருத்தி வைக்க வேண்டும் அதன் மிகுதியாகிய ஐந்து பாகம் மேலே சிவாம்சமாகத் தெரியும் படி அமைதல் வேண்டும். இலிங்க நீளத்திலிருந்து அகலத்தைக் கொள்ளும் முறையை அடிப்படையாகக் கொண்டு விளங்குபவையே நாகர, திராவிட, வேஸர இலிங்கங்களாகும்.[31]

தேவர்களால் தாபிக்கப்படும் இலிங்கத்தை தைவிக லிங்கமெனவும் எவராலும் உருாக்கப்படாமல் தானே சுயம்புவாக உற்பத்தியாகும் லிங்கம் உத்பூத லிங்கம் எனவும் அழைக்கப்படும். கல்லில் அமைந்த லிங்கங்களுள் உத்பூதம், தைவகம், மானுஷம் காணபம் என்பவை வழிபாட்டுக்குச் சிறந்தவை எனக் கருதப்படும்.[32]

ஆகம, சிற்ப விதிகளுக்கு அமைய உருவாக்கப்படும் மானுஷலிங்கம் எட்டுவகைப்படுபவை என காமிகாமமும் காரணாகமமும் குறிப்பிடுகின்றன.[33]

காசியப்ப சில்ப சாஸ்திரமும், சில்ப ரத்னமும் இவற்றை சம கண்ட லிங்கம் ( சர்வசம லிங்கம், மைலிங்கம் ), வர்த்மான லிங்கம், சைவாதிக லிங்கம்(சிவாதிக லிங்கம்) ஸ்வதிக லிங்கம், சர்வவோபத்ரலிங்கம், சர்வ தேசிய லிங்கம், நிரைராசிக லிங்கம், தாராலிங்கம் என எட்டு வகையாகக் காட்டுகின்றன.[34]

இலிங்கத்தின் மேற்பக்க விளிம்பின் வளைவான சிரோவர்த்தனம் பற்றிய விளக்கங்களை காமிகாகமம்[35] காட்டுகின்றது.சிவலிங்கபீடத்தை ஸ்திரி சிலை வகைக் கல்லைக் கொண்டு அமைத்தல் அவசியம் எனக் காரணாகமம் [36] கூறுகின்றது.

இலிங்கத்தையும் பீடத்தையும் உருவாக்குவதற்கு முதலில் இலிங்க நாளத்தின் நீளத்தை இலக்கண முறைப்படி உறுதி செய்து கொள்வது அவசியம்.பின்னர் தேர்ந்தெடுத்த நீள அளவிலிருந்து அதன் அகலத்தைக் கணக்கிடுதல் வேண்டும்.

இந்த அகலங்களின் அடிப்படையில் பீடத்தின் அளவுகளைக் கணித்தல் வேண்டும். இலிங்கத்தின் சுற்றளவு எத்தனை அளவோ அத்தனை அளவே பீடத்தின் பரப்பு இருத்தல் வேண்டும். ஆகவே இலிங்கம் பீடத்திற்கு சமமாகவே அமைக்கப்படும். இவ்வாறு அமைப்பதனால் நிழல் விழுவதனால் உண்டாகும் குற்றம் அற்றதாக விளங்கும்.

கருப்பக்கிரகத்தின் உள் அகலத்தின் பாதி அல்லது காற்பங்கு பீடத்தின் அகலமாக அமையலாம். கல்லில் அமைந்த இலிங்கத்தின் பீடம் கல்லினாலேயே அமையவேண்டும். சுதை செங்கல் இவைகளிலும் இருக்கலாம். மரத்தால் செய்யப்பட்ட இலிங்கத்திற்குப் பீடமானது மரத்தினாலாவது செங்கலினாலாவது இருக்கவேண்டும். இரத்தினத்திலான இலிங்கத்தின் பீடம் இரத்தினத்தினாலாவது, உலோகத்தினாலாவது அமையும்.

பீடத்தின் அகலம், இலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்திற்கும் சமமாக இருப்பது அவசியமாகும். பீட அகலத்தின் மூன்றில் இரு பங்கு உயரமுடையது உத்தமபீடமாகும். அரைபங்கு உயரமுடையது அதமமாகும். சிலைகளில் மத்திய அளவை எட்டு விதமாக அமையும். இது ராகரலிங்கத்தின் பீடமாகும்.

இலிங்க உயரத்தை ஒன்பது பங்குகளாகச் செய்ய அவைகளின் இருபங்கு தல அம்சமாகும். இதில் ஒரு பங்கையும் தல அம்சமாக கொள்ளலாம். இந்த தலாம்சம் பூமியினுள் வைக்கப்படுவதாகும். இப்பாகம் நீங்கலாக பாக்கியுள்ள பாகங்கள் பீடத்தின் உயரமாக அமையும். இது திராவிட இலிங்கத்தின் பீட அமைப்பாகும். பீடமானது விஷ்ணுபாகத்தின் உயரத்தைவிட காற்பங்கு கூடுதலாக இருந்தால் அது சிறப்பாகும்.

இவற்றிடையே உள்ள மத்திய அளவை எட்டு பாகங்களாகச் செய்ய பீடத்தின் உயரம் ஒன்பது வீதமாகும். இது வேஸர லிங்கத்துக்குரியதாகும;.[37]

இலிங்க பீடம் வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ கோமுகையுடன் அமைந்திருக்கும். காரணாகமம் பத்ம பீடம், பத்ர பீடம்,விஜயம், ஸ்வாயம் பூவம், ஸ்தண்டிலம் என ஐந்து வகையான லிங்க பீட அலங்கார முறைகளைக் குறிப்பிடுகின்றன.[38] உபானம், ஜகதி, குமுதம், பத்மம், கம்பம், கண்டம், பட்டிகை, நிம்நம், கிருதவாளி என்ற பகுதிகளைக் கொண்டதாக இலிங்க பீடம் அமையும். ஒவ்வொரு பீடமும் அமைய வேண்டிய அமைப்பு முறைகளை ஆகம சிற்ப நூல்கள் வரையறுத்துக் காட்டுகின்றன.

இலிங்கத்தையும் அதனுடன் கீழே இணைந்துள்ள சிவலிங்க பீடத்தையும் கர்ப்பக்கிரகத்தின் தரைமட்டத்தில் நிலை நிறுத்துவதற்கு நான்கு கற்கள் ஸ்வஸ்திக் கோலத்தில் பாதசிலை( பிரம்ம சிலை, ஆதாரசிலை )யாக பதிக்கப்படுவதற்கான விதிமுறைகளை ஸ்ரீ காசியப்ப சில்ப சாஸ்திரம் தெளிவாகக் காட்டும்.[39]

ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரம் இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களுடன் தொடர்புடையது எனக் கூறுவர்.[40]

இராமபிரான் இராவண சம்ஹாரத்தின் பின் இந்த ஸ்தலத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் எனக் கூறப்படுகின்றது.[41]

குளக்கோட்டு மன்னன், பழம் பெருமைகளை இழந்து அழிவுற்றுச் சிதைந்த நிலையிலிருந்த திருக்கோவிலைச் சீர்திருத்தி திருப்பணிகளையெல்லாம் குறைவறச் செய்வித்து மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தான்.[42]

ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் ( கி. பி. 1462 -1410 ) இவ்வாலயத்துக்கு கி. பி. 1448 ஆம் வருடம் வருகைதந்து[43] இடிந்து சிதைந்து போயிருந்த இக்கோயிலைப் புனருத்தாரணம் செய்து போதிய அளவு மானியங்களையும் அளித்து கல்வெட்டுச் சாசனத்தின் மூலம் உறுதி செய்து வைத்தான். இன்றும் இக்கோயிலின் கர்ப்பக்கிருக வெளிச்சுவரில் இதனைக் காணலாம்.[44]

தற்போதுள்ள கர்ப்பக்கிருகச் சுவரின் வெளிப்பகுதியில் இக்கல்வெட்டு வடக்குப் பகுதியிலிருந்து மேற்காக தெற்குப் பகுதிவரை நாற்பதடி நீளத்துக்கு நான்கு வரிகள் கொண்டதாக அமைந்துள்ளது. இதனை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த G.M.பௌலர், இப்பொழுதுள்ள கர்ப்பக்கிருகத்தில் இவை செதுக்கப்பட வில்லையென அபிப்பிராயப்படுகிறார்.(இதன்தமிழ்மொழிபெயர்ப்பு பின்னிணைப்பு - 1 இல் தரப்பட்டுள்ளது )

ஒன்பதாவது பராக்கிரமபாகு ( கி. பி. 1509 – 1528 ) இக்கோயிலுக்கு கி. பி. 1517 ஆம் வருடம் வந்து திருப்பணிகள் செய்வித்து தேவையான பண்டங்களையும் நிலங்களையும் சர்வமானியமாகத் தாமிரசாசனம் செய்து கொடுத்துள்ளான்.[45]

மிகவும் உன்னதமான நிலையில் இருந்த இந்த க்ஷேத்திரத்துக்குச் சொந்தமான செல்வத்தை யெல்லாம் போர்த்துக்கேயர் கொள்ளையடித்து வந்தனர்.[46]

போர்த்துக்கேயரின் அட்டுழியத்தின் காரணமாக கி. பி. 1578 ஆம் ஆண்டு மகோன்னத நிலையில் இருந்த முன்னேஸ்வரம் தேவஸ்தானம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.[47]

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் ( கி. பி. 1747 - 1782 ) போர்த்துக்கேயரால் சின்னாபின்னப்பட்டிருந்த இவ்வாலயத்தை சீர்திருத்தி கி. பி. 1753ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்து[48] தேவையான பொருட்களையும் வயல் நிலங்களையும் சர்வமானியமாகச் செப்புப் பட்டயம் எழுதிக் கொடுத்தார்.[49]

இதன் பின் தற்போதுள்ள சான்றுகளின் படி 1875, 1919, 1963, 1991 ஆகிய ஆண்டுகளில் இக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

தற்போதைய கோயிலின் கர்ப்பக்கிருகமும் அதன் ஸ்தூபியும் இலங்கையில் எங்குமில்லாதவாறு பிரமாண்டமான வகையில் உருவாக்கப்பட்ட நிலையில் உள்ளது.[50]

இங்கு இலிங்கத்தின் பிரம்ம பகுதி எனப்படும் சதுரமான அடிப்பகுதியின் மேல் விஷ்ணு பகுதி எனப்படும். எண்கோணநடுப்பகுதியும், அதன் மேல் ருத்ரப் பகுதி எனப்படும் மேற்பகுதியும் ஆகமமுறைகளுக்கு ஏற்ப அமைந்து உள்ளதென்பர்.

ஆத்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று பிரிவுகளுள் அடங்கும் முப்பத்தாறு தத்துவங்களையும் சிவலிங்கத் திருமேனி கொண்டு விளங்குமென்பர்.[51]

ஆகம முறைப்படி அமைந்த இந்த லிங்கம் சதுரமான பத்ரவகையைச் சேர்ந்த பீடத்தில் அமைந்துள்ளது. அதாவது இலிங்க பீட உயரத்தை பதினாறு பாகங்களாக்கி அதில் உபமானம் ஒரு பகுதியாகவும், ஜகதி ஒரு பகுதியாகவும்,குமுதம் மூன்று பகுதிகளாகவும், பட்டிகை ஒரு பகுதியாகவும், கண்டம் மூன்று பகுதியாகளாவும், கம்பம் ஒரு பகுதியாகவும், பட்டிகை ஒரு பகுதியாகவும், கிருதவாரி ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளதென்பர். இந்த பத்ர பீடம் அடியில் ஸ்வதிக அமைப்பிலான பாத சிலைகளின் மேல் நிலை கொண்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

இங்கு கருவறையில் இலிங்கத்துடன் அம்பாளின் தாமிர விக்கிரகம் சிவலிங்கத்தின் முன்பாக இடதுபக்கத்தில் அமைக்கப்பட்ட கருங்கல் பீடத்தில் நின்ற கோலமாக காணப்படுகின்றது. இதன் முன்பாக கீழ்மட்டத்தில் ஸ்ரீ மகா மேருயந்திரம்( ஸ்ரீ சக்ரம் )இடம் பெறுகின்ற அதேவேளை செப்புத் தகட்டினாலான ஸ்ரீசக்ரம் அம்பாள் விக்கிரகத்தின் முன்பாகக் காணப்படுகிறது. கல்லிலானமூலஸ்தான இலிங்கத்துடன் உலோகத்திலாலான வடிவழகியின் வடிவமும் சேர்ந்து உள்ள நிலை அபூர்வமானது. தொன்மை வாய்ந்த இச் சிவாலயத்துக்கு ரிய ஐதீகங்களுள் இலிங்கத்துடன் அம்பாளின் வடிவமும் இணைந்து நிற்கும் இந்நிலை குறிபிபிடத்தக்கதொன்று.[52]

1 ப. கோபலகிருஷ்ண ஐயர், "சிவாகமங்களும் சிற்பங்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல்," கலாநிதி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு 1981. பக்கம் 383
2. K.Kailasanatha Kurukkal, " A study of Saivism of the Epic and Puramic Periods - together with its Ancillary Cult with special reference to the Saiva religious practices prevalent in South India and Ceylon" unpublished thesis submitted for the Doctor of philosophy, University of Poona,1960, page 268
3. திருமந்திரம் - 1773
4. லயம் கச்சந்தி பூதாநி சம்ஹாரே நிகிலாதிச
   சிருஷ்ட்டி காலே யதா சிருஷ்டி ஸ்தஸ் பால்
   லிங்கமுதாகிகருதம்
5. சுவேதாஸ்வதர உபநிடதம் IV. 9, IV. 10
6. Gopinatha Rao, T. A, Elements of Hindu Iconography Vol. II Pt. 1, 1971, PP 56 - 71
7. K.Kailasanatha Kurukkal, " A study of Saivism of the Epic and Puramic Periods - together with its Ancillary Cult with special reference to the Saivareligious practices prevalent in South India and Ceylon" unpublished thesis submitted for the Doctor of philisophy, University of Poona,1960, page 281ff 304f
8. இலிங்க புராணம் I . 19 . 15
9. சிவபுராணம் - வித்யேஸ்வர சம்ஹிதை 1.6
10. ஸ்கந்தபுராணம; III . 1-1 : III. 1. 43
11. காரணாகமம் I . 9.
    காமிகாமம் 1.62
12. மானசாரம; 1 .62
13. காசியப சில்ப சாஸ்திரத்திம் 11. 62

14. சில்பரத்தினம் 11. 2
15. ஸ்ரீ ஸாரஸ்வதிய சித்ர கர்ம சாஸ்திரம் I
16. சகளாதி காரம் I
17. காரணாகமம் I . 9, I - 3
18. காரணாகமம; 1.9:8, 1.9, 4-7; 1.9, 8-12
19. காமிகாமம் 1.62, 6:9 ; 1.62.8, I. 62.12
20. காரணாகாமம் 1-9, 26-44: 1-9-31, 1-9. 33-35, 1-9. 38-39, 1-9. 41-42, 11-9. 50-54
21. காசியப சில்ப சாஸ்திரம் II. 49-32 : 1. 62.10, 11. 46-49, 11. 1.42-43, 11.49: 33-39
22. காரணாகமம் I . 9. 55
23. காசியப சில்பசாஸ்திரம் 11. 49.55
24. காசியப சில்பசாஸ்திரம் 11. 49.58. அ
25. காசியப சில்பசாஸ்திரம் 11. 49.57-58 ஆ
26. காசியப சில்பசாஸ்திரம;; 11. 49.59 அ
27. காசியப சில்பசாஸ்திரம் II. 49.60
28. காசியப சில்பசாஸ்திரம் II. 49.62
29. காரணாகமம; I . 9. 59 - 60
30. காமிகாமம; 1.62. 17 - 22
காரணாகமம; I . 9. 1100
காசியப சில்பசாஸ்திரம 72 - 73
ஸ்ரீ ஸாரஸ்வதிய சித்ர கர்ம சாஸ்திரம் 1 -7
சில்பரத்தினம II 2.13
31. ப. கோபாலகிருஷ்ண ஐயர் . "சிவாகமங்களும் சிற்பங்களும் சித்திரிக்கும்சிலவிக்கிரகவியல;": கலாநிதிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு - 1981 பக். 395
32. மானசாரம் 52 : 101
33. காமிகாமம் 1.62 . 27 - 37
காரணாகமம; I . 9. 117 - 127
34. காசியப சில்பசாஸ்திரம் 11. 49: 125 - 140
சில்பரத்னம் 11.2 : 66 - 109
35. காமிகாமம் I . 52 - 61
36. காரணாகமம் I . 9: 147 - 150
37. ப.கோபாலகிருஷ்ண ஐயர் " சிவாகமங்களும் சிற்பங்களும் சித்திரிக்கும்சிவவிக்கிரகவியல்" : கலாநிதிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு-1981பக் .409 - 410

38. காரணாகமம் I. 9. 147 - 166 அ
39. காசியப சில்பசாஸ்திரம; II. 51
40. ஸ்ரீ தக்ஷிண கைலாச மகாத்மியம் 16ஆம் அத்தியாயம்
41. Sketches of Ceylon History Sir P. Arunachalam, page 7
Report on the Census 1901, Vol.1, Sir P.Arunachalam page 7
Ancient Jaffna, Mudaliyar C. Rasanayagam C.C.S ( 1926 ) page 83, 185
42. முன்னேஸ்வர மான்மியம்- மு. சோமாஸ்கந்தக் குருக்கள்- 1927, பக். 10.
கோயிலில் உள்ள ஏட்டுப் பிரதிகள்
ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு பா. சிவராமகிருஷ்ண சர்மா- 1968
43. The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933
44. The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933
Ceylon Gazetteer - Simon Casie Chetty - page 164
Journal of the Ceylon Branch of the Royal Asiatio Society 1887, Volume X, No. 35, page 118-119
CeylonTamil Inscription-Part I, Peradeniya, 1971, Veluppilai, Dr .A. page37-43
S.Pathmanathan, "The Munnesvaram Tamil Inscription of Parakramabahu VI," Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society ,X (34).pp.54-68
சாசனமும் தமிழும்- பேராதனை - 1971, கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை
ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் - பிரம்மஸ்ரீ மு.சோமாஸ்கந்தக் குருக்கள் .பக்35 - 36, 1927
45. The Culavamsa - II. Wilhelm Geigse ( 1930 ) page XXIV
46. The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933

47. The Ceylon Littoral 1593.- P. E. Pieris. Litt. D (Cantab) 1949

Catholic Chilaw - E. A. Fernando . page. 10, 14

Lt. of Fr. H. Gomez S.J. dated 29. 12. 1606 Ceylon Ant. II - Page 21

History of Catholic Churches - Fr. S. Gnanaprakasar, Page. 255.

Ceylon Portuguese Era, Volume I, P. E. Pieris, chapter IX Page 199.

A short History of Ceylon - H. W. Codrington ( 1947 ) Page 130.

Hinduism in Ceylon Rev. James Cartman 1957 Page 44.

The Culcutte Rewiew - Volume XLVII, No. 3. June 1933

The Catholic Church in Ceylon,the Portuguese Period,Vol. II 1566 to1619,page.254

The Catholic Church in Ceylon, the Portuguese Period, Vol. III 1620 to 1658 pp, 9, 23, 33, 134,135, 193, 299

48. The Calcutta Rewiew Vol. XLVII. No 3. June 1933

49. ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் - மு. சோமாஸ்கந்தக் குருக்கள் பக்கம் 30 ( 1927 )

50. ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு, பா. சிவராம கிருஷ்ணசர்மா பக்கம் 12 - ஆடி 1968

51. Dr. S. S. Janaki, Symbolism of Siva and Sivalinga article in English கைலாசநாதம்,பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், பவளவிழா மலர் - 2000 ) பக்கம் 327

52ப. கோபலகிருஷ்ண ஐயர், "சிவாகமங்களும் சிற்பங்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல்" கலாநிதி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு 1981. பக்கம். 758

## அனுபந்தம் - 1

*முன்னேஸ்வரம் கோயிலில் உள்ள கல்வெட்டின் மொழிபெயர்ப்பு*

நான் முன்னேஸ்வரம் கல்வெட்டிலுள்ளவற்றினைப் பல முறைகள் ஆராய்ந்துள்ளேன். அக்கல்வெட்டில் உள்ள எழுத்துக்களில் பல வாசித்தறிய முடியாத நிலையில் இருக்கின்றன. இக்கல்வெட்டு எழுத்துக்களைக் கொண்ட கருங்கற்கள் பழையதொரு கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு, பின் இப்பொழுதுள்ள கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளன, என்பது என் அபிப்பிராயம்.

கல்வரிசைகள் சேர்ந்து இணையும் இணைப்புக்களில் உள்ள எழுத்தக்கள், சுண்ணக்கலவையால் மறைக்கப்பட்டுள்ளன.இப்பொழுது உள்ள கட்டிடத்தின் கல்லில், இவ்வெழுத்துக்கள் செதுக்கப் பட்டிருக்குமானால் இவ்வாறு இருக்கமாட்டாது.

இக்கல்வெட்டு நான்கு வரிகளைக் கொண்டதாகவும் முப்பது அல்லது நாற்பது அடிகள் வரை நீண்டும் நிலமட்டத்திலிருந்து ஏறக்குறைய நான்கு அடிகள் உயரத்திலும் அமைந்துள்ளது.

கோயிலின் அருகாமையில் இருந்ததொரு குளத்தைத் தோண்டியபொழுது, இரண்டு சிற்பத் துண்டுகள் கிடைத்தன. நந்தியொன்றின் தலையும் சுப்பிரமணியக் கடவுளின் சிலையுமே அவை. இவை மிகப் பழமை வாய்ந்தவையாக காணப்படவில்லை.

சிலாபத்து நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கொன்றில், இக் கல்வெட்டுச் சாசனம் ஒரு அத்தாட்சியாக விளங்குகிறது. என நம்புகிறேன்.

*மொழிப்பெயர்ப்பு*

எங்கும் ஆனந்தம் விளங்கட்டும்! ஸ்ரீ சங்கபோதி மகாராஜாவின் வழித்தோன்றலிலே உதித்தவரும், புத்த பகவானின் பாதாரவிந்தங்களில் மலர்களைச் சமர்ப்பணம் செய்து வழிபடுபவரும், சூரிய குலத்துதித்தவரும், அரசர்க்கெல்லாம் அரசராக விளங்குபவரும், அரச பரம்பரைக்கும் வியாபாரவிருத்திக்கும் அதிபதியாக இருக்கின்றவரும், மூன்று உலகங்களுக்கும்

சக்கரவர்த்தியாக திகழ்கின்றவருமான மாட்சிமை பொருந்திய, ஸ்ரீ பராக்கிரமபாகு மன்னர் தம்முடைய ஆட்சியின் முப்பத்தெட்டாவது ஆண்டு, ஐப்பசி மாதம், வளர்பிறையின் பத்தாம் நாள், எல்லாக் கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, முன்னீஸ்வரத்திலுள்ள கோயிலில் பூசை செய்கின்ற குருமார்களை ( நம்பிமார்களை ) ஜெயவர்த்தனா கோட்டைக்கு அழைப்பித்துக் கோயிலின் விருத்தாந்தங்களை விசாரித்தறிந்து, முன்பு கோயில் குருமாருக்கு, முன்னீஸ்வரம் பகுதியில், சொந்தமாகவும், கோயிலின் பெயரிலும் இருந்த நிலங்களையெல்லாம் முன்பிருந்தவாறே, மீண்டும் கையளிக்கின்றார்.

இலுப்பதெனியா என்னும் இடத்தில் 22 அமண நெல் விளையும் வயல்களைப் பூஜைக்கு உரியதாகவும், கோட்டைப்பிட்டியாஎன்னும் இடத்தில் 30 அமண நெல்விளைநிலங்களையும், தித்தக்கட என்னும் இடத்தில் 8 அமண நெல் விளையும் நிலங்களையும்இத்துடன் சேர்ந்த குடியிருப்புப் பகுதிகளையும், அதனோடு சேர்ந்துள்ள காட்டுப் பாங்கான பகுதிகளையும் பிரதான குருக்களுக்குக் கையளிக்கின்றார்.

இத்துடன் முன்னாழி அரிசி, காய்கறி வகை, கீரை வகை, நறுமணம் கமழும் பொருட்கள் போன்றவற்றினை நித்தியப் பூஜைக்குப் பெறும் பொருட்டு, மாதமொன்றுக்கு முப்பது பணத்தினை, பூஜை செய்யும் குருமார்களுக்கும், பதினொரு பணத்தினை, பிரதான குருமாருக்கும் சூரிய சந்திரர் இருக்கும் வரை, இவர்களுடைய பரம்பரையின் சந்ததியினரும், அனுபவிக்கும் வகையில், சர்வமானியமாக முன்னீஸ்வரருக்கு அளித்து, இதனை ஒருவரும் திருப்பி மீட்கக் கூடாதெனக் கட்டளையிடுகிறேன். இந்நிலங்களுக்குத் தீங்கு செய்பவர்கள் பஞ்ச மகா பாதகங்கள் செய்த பாவிகளாகவும், இந்நிவத்தின் அபிவிருத்தியில் அக்கறையெடுப்பவர்கள் சுவர்க்கானந்தப் பேரின்பம் பெறுவார்கள்.

இத்துடன் ஒரு சுலோகமும் உள்ளது.
அதன் மொழிப்பெயர்ப்பு:

எல்லையில்லாத ஞானத்தையுடைய சைவ சமயத்தின் தலைவராக, கடவுளுக்கெல்லாம் கடவுளாகவும் விளங்குகின்ற, முன்னீஸ்வரருடைய அருளினால், பராக்கிரமன் இக்கல்வெட்டினை எழுதியுள்ளான்.

